B1 041

# கனடா திருமறைக் கலாமன்றம்

பெருமையுடன் வழங்கும்




# சர்வதேச கலைப்பாலம்

October 15, 2016

- தாயகக் கலைஞருடன் ஒரு முத்தமிழ் கலைவிழா -




JC's
BANQUET HALL
Where Your Traditions Matter
BOOK YOUR
Special event with us
Birthdays, Bachelor/Bachelorette, Weddings, Engagements, Corporate Parties, Holiday Parties, Retirement Parties, Coming of Age Parties & More.
4 VENUE HALLS, ANY GROUP SIZE UP TO 550 GUESTS.
1686 Ellesmere Rd, Toronto, ON M1H 2V5
TEL: 416-290-6186 | www.jcsbanquet.ca
www.JCsGroup.ca
JC's Group of Companies
JC'S GRILL HOUSE
Fresh Dining
HARDCORE SECURITY INC
Employment Services

# திருமறைக் கலாமன்றம்
## CENTRE FOR PERFORMING ARTS
රංග කලා කේන්ද්‍රය

238 Main Street, Jaffna, Sri Lanka. Tel & Fax. 021-222 2393
Website: www.cpartsteam.com, E-mail: cpateam@sltnet.lk / cpajaffna@yahoo.co.uk



திருமறைக் கலாமன்றத்தின் அரைநூற்றாண்டுகால இயக்கத்தின் அடையாளமாக அமையக்கூடிய வகையில் கனடாத்திருமறைக்கலாமன்றத்தினர் தாயகக் கலைஞர்களையும் அங்கு அழைத்து மேற்கொள்ளுகின்ற கலைவிழாவுக்கு வாழ்த்துச்செய்தி அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கலையை மூலதனமாகக்கொண்டு அரப்பணம்மிக்க கலைஞர்களின் கலைத் தொண்டினால் இதுவரை காலமும் பல்வேறு பணிகளை சமூகத்திற்கு ஆற்றியுள்ளோம். நாம் செயலாற்றத் தொடங்கிய காலத்தில் சாதிசமூகப் பிரச்சனைகள் சமூகத்தில் செல்வாக்குச் செலுத்திய காலத்தில் கலையை அதற்கான ஆயுதமாகப் பயன்படுத்தினோம். பின்னர் உள்நாட்டுப் போர் எம்மண்ணில் நிலைகொண்டிருந்த இடர் மிகுந்த காலகட்டத்தில் நாடகங்களையும் கலைநிகழ்வுகளையும் கொண்ட பல்வேறு ஆற்றுப்படுத்தல்களையும் அரங்கப்படைப்புக்களையும் நொந்து கிடந்த சமூக மேம்பாட்டிற்காக ஆற்றினோம்.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக குரல்தொடுத்த அதேவேளை சமாதானத்துக்காகப் போராடிய ஒரே ஒரு கலை நிறுவனமாகவும் நாம் இருந்தோம். சவால்மிகுந்த காலகட்டத்திலேயே இன நல்லுறவுக்கான கலைப்பாலங்களை மேற்கொண்டோம். இவை மட்டுமன்றி அழிந்துவிடும் விளிம்பில் இருந்த கலைகளை வளர்த்தெடுப்பதிலும் அவற்றின் நிலைபேணுகைக்கு உதவுவதிலும் நாம் எம்மால் இயன்ற பணிகளை ஆற்றியிருந்தோம். குறிப்பாகச் சொல்லப்போனால் யுத்தத்தின் நெருப்பில் எமது அரங்கக் கலைகளும் கலாசாரமும் அழிந்து போகாது அவற்றின் ஆன்மீக நெருப்பினைத் தக்கவைப்பதில் எமக்கான வரலாற்றுக் கடமையை நாம் செய்துள்ளோம் என நினைக்கின்றேன்.

இந்த நீண்ட நெடும் பயணத்தில் எம்மோடு இணைந்துநின்ற வகையில் எமது வெளிநாட்டுத் திருமறைக்கலாமன்றங்களின் பணிகள் விதந்துரைக்கத்தக்கது. அதிலும் குறிப்பாக கனடா திருமறைக்கலாமன்றத்தின் பணிகளும் அவர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவைகளும் பாராட்டத்தக்கவை. கனடாத் திருமறைக்கலாமன்றம் ஆரம்பித்து இருபத்தைந்து ஆண்டுகளைத் தொட்டு நிற்கும் அவர்களின் வெள்ளிவிழாக்காலத்தில் விசேடமாக அவர்களை வாழ்த்திநிற்கின்றேன். அதில் ஆர்வத்துடன் இயங்கிவரும் ஒவ்வொரு கலைத்தொண்டர்களையும் பாராட்டுவதுடன் தொடர்ந்து அவர்கள் செய்கின்ற பணிகள் சிறப்படைய இறைவனை வேண்டி நிற்கின்றேன். தொடர்ந்து அவர்கள் புலம்பெயர்ந்த மக்கள் மத்தியில் எமது கொள்கைகளை தம்பணிகளால் நிலை நிறுத்த வேண்டுமென்றும் தாய்த் திருமறைக்கலாமன்றத்தின் இயங்குகைக்கு பலம் சேர்க்கவேண்டுமென்றும் ஆசித்து நிற்கின்றேன்.

**நீ. மரியசேவியர் அடிகள்**
இயக்குநர்
திருமறைக்கலாமன்றம்

50th ANNIVERSARY
1965-2015

Congratulations

# Thirumarai Kalamanram
# Sri Lanka

CELEBRATING 25 Years
1991– 2016

# Thirumarai Kalamanram
# Canada



கலைவழி மறைபணியாற்றி ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்யும் திருமறைக் கலாமன்றத்திற்க்கு எனது மனம் நிறைந்த பாராட்டுகளையும் ஆசிகளையும் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இயல் இசை நாடகம் எனும் தமிழ்மொழியின் முப்பரிமாணங்களையும் இக்கலாமன்றம் அளவிடமுடியாத முறைகளில் வளர்த்துள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய உண்மையாகும்.

ஐம்பது ஆண்டுகளாக கலையுலகில் அடைந்த வெற்றிகளை கொண்டாட இது ஒரு சிறந்ததும் தனித்துவமுமான வேளையாகும்.

இக்கலாமன்றத்திற்க்கும் அதன் நிறுவனர் அருட்கலாநிதி மரியசேவியர் அடிகளாருக்கும் அனைத்து உறுப்பினர்களுக்கும் இறைவன் பொழிந்த அருள் வளங்களுக்கு நன்றி கூறுவோம்.

திருமறைக்கலாமன்றம் இன்றும் என்றும் நமது முத்தமிழின் நம்பிக்கை மிகுந்த காவலர்களாக விளங்க வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

அன்புடன்

அருட்பணி பீற்றர் ஜித்தேந்திரன்

பங்குத்தந்தை – தூய ஆரோக்கிய அன்னைப் பங்கு

ரோரன்ரோ - கனடா

# DR. PAUL HEALTHY LIFE CLINIC

**(Homeopathy and Acupuncture)**

## Dr.போல் ஜோசேப்

BHMS (Ind.), HD (can.) RAP (can.)



ஹோமியோபதி (ஜெர்மன் மருத்துவமுறை)
அக்குபங்சர் (சீன மருத்துவமுறை)

B.H.M.S (Bachelor of Homeopathy Medicine and Surgery)
Qualified from Tamilnadu Dr. M.G.R. Medical University, Madras, india.
Registered Homeopath and Acupuncturist, Canada

முன்னாள் பேராசிரியர், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்தின் மருத்துவ கல்லூரிகள்.

முன்னாள் விரிவுரையாளர், விநாயகா மிஷன்ஸ் பல்கலைக் கழகம் சேலம், இந்தியா.

மருத்துவ ஆலோசகர், சண்முகா மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், சேலம்.

இந்தியாவின் பல்வேறு பல்கலைக் கழகங்களின் தேர்வாளராகவும், சிறப்பு வருகை விரிவுரையாளராகவும் பணிபுரிந்தவர்.

இலங்கையின் முதல் B.H.M.S மருத்துவ பட்டம் பெற்ற மருத்துவர்.

கனடா, இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் பதிவு பெற்ற மருத்துவ நிபுணர்.

ஹோமியோபதி, அக்குபங்சர், அக்குபிரஷர், நாடிப் பரிசோதனை தியானம், யோகா மற்றும் உளவியல் ஆலோசகர்.

பக்க விளைவுகளில்லாத, பத்தியமேதுமில்லாத, அனைத்து நோய்களிலிருந்தும் சுகமடைந்து ஆரோக்கிய வாழ்வு பெறலாம்.

**Tel : 416 438 3939 Cell : 416 9864903 drjp63@yahoo.com**

**1193 , Brimley Rd., (Brimley & Brimorton) Scarborough M1P 3G5**

October 15, 2016
Toronto, Canada

திருமறைக் கலாமன்றத்தின்
சர்வதேச கலைப்பாலம் 2016

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம் ரொறன்ரோ

SRI VARASITHTHI VINAAYAGAR HINDU TEMPLE OF TORONTO

மேன்மை கொள் சைவநீதியும் தேமதுரத் தமிழும் உலகெலாம் விளங்கும் வகைசெய்வோம்

3035 KENNEDY ROAD, UNIT-10, SCARBOROUGH, ON. M1V1S3 CANADA

416.291.8500 WWW.VINAAYAGAR.COM



**சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்**
**ஆலய பிரதமகுரு, ஸ்தாபகர், முதல்வர்**
**ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்**

Sivashri Dr. Panchaadchara Vijayakumara Kurukkal
The Founder Chief Priest

கனடா திருமறைக் கலாமன்றம் தனது 25வது வெள்ளி விழாவையும், திருமறைக் கலாமன்றத்தின் இலங்கை தாய் மன்றம் தனது 50வது ஆண்டு பொன் விழாவையும், புரட்டாதி 15ம் திகதி (Oct 15th 2016) சிறப்பு விழாவாகக் கொண்டாடுவதையிட்டு ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயமும், ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரியும் இணைந்து விழா வெற்றிபெற வாழ்த்துகின்றோம்.

கல்வி, சமயம், சமூகம் மற்றும் பண்பாடு, கலாச்சாரம், விழுமியங்களும் மொழியும் மேன்மைபெற திருமறைக் கலாமன்றத்தின் அளப்பரிய பணி, அனைத்து சமூ கத்தினருடனும் இணைந்து முன்னெடுக்கபட்டு வருகிறது.

பொன்விழாக் காணும் இந்த மகிழ்வான வேளை, நாமும் எல்லாம் வல்ல வரசித்திப் பெருமானின் பேரருள் நிறைவாகக் கிடைக்க மனதார வாழ்த்தி அமைகிறோம்.

‘மேன்மை கொள் சைவநீதியும் தேமதுரத் தமிழும் உலகெலாம் விளங்கும் வகைசெய்வோம்’

“சிவாச்சார்ய கலாநிதி”
சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்
ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

# ஈழத்திலிருந்து வருகை தந்துள்ள மன்றத்தின் மூத்த கலைஞர்கள்



## திருமதி சுகன்யா அரவிந்தன்

யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் இசைத்துறை விரிவுரையாளராக பணியாற்றுபவர். யாழ் பல்கலைக்கழகத்தில் இசை, நடன பாடங்களைப் பயின்றவர். திருமறைக் கலாமன்றத்தின் 'கலைத்தூது அழகியல் கல்லூரியினூடாக, பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் நடனத்துறையில் 'முதுகல்வி கலைமாணி' பட்டம் பெற்றவர். பல்வேறு இசைக்கச்சேரிகளை நடத்தியிருப்பதுடன், இசை இறுவெட்டுக்களிலும் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

## திரு. ஜே. ஜோண்சன் ராஜ்குமார்



யாழ் திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குனர். நாடக, எழுத்தாளர், நடிகர், நெறியாளர் என்ற பன்முக ஆளுமையுடன், பல நாடகங்களை எழுதி, நெறிப்படுத்தி, நாட்டுக்கூத்தின் பல்வேறு புத்தாக்க முயற்சிகளில் ஈடுபட்டு வருபவர். இவர் எழுதிய 'கம்பன் மகன்' 'கொல் ஈனுங் கொற்றம்' 'அமைதிப்பூங்கா' 'அற்றைத் திங்கள்' போன்ற நாடகங்கள் நூல்களாக வெளிவந்துள்ளன. யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையில் நாடகமும் அரங்கியலும் கற்பிக்கும் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார்.

## திரு. இ. ஜெயகாந்தன்



யாழ் திருமறைக் கலாமன்றத்தின் மேலதிக பிரதி இயக்குனர். ஒரு இசைத்துறைப் பட்டதாரி. யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் இசைத்துறை ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். திருமறைக் கலாமன்றத்தின் திருப்பாடுகளின் காட்சிகளிலும் இன்னும் பல நாடகங்களிலும் பிரதான பாத்திரமேற்று நடித்துள்ளார். நடிகனாகவும், நெறியாளனாகவும், அரங்கத் துறையில் சிறப்பான பணியாற்றியுள்ள இவர், இசைத்துறையில் திருமறைக் கலாமன்றத்தில் மிருதங்கம் பயின்று, மன்றத்தின் முதல் மிருதங்க மாணவனாக அரங்கேற்றம் கண்டவர். பாடகனாக பல்வேறு இசை நிகழ்வுகளிலும் இறுவெட்டுக்களிலும் பாடியுள்ளார்.

# ஈழத்திலிருந்து வருகை தந்துள்ள மன்றத்தின் மூத்த கலைஞர்கள்

## திரு. பொ. தைரியநாதன் ஜஸ்ரின் ஜெலூட்



யாழ் பல்கலைக்கழகத்தின் நாடகமும் அரங்கியலும் பாடத்தினை சிறப்பு பாடமாகப் பயின்ற இவர், பிரபல இசை நாடக கலைஞர் தைரியநாதன் அவர்களின் புதல்வனாவார். திருமறைக் கலாமன்றத்தின் இசை நாடகத் துறையின் பொறுப்பாளனாக பங்களிப்பு செய்யும் இவர், ஒரு பிறவிக் கலைஞர். இசை நாடகம், கூத்து, நவீன நாடகங்கள் என பல வடிவங்களிலும் சிறப்பாக நடிப்பினை வெளிப்படுத்திய இவர், பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் அரங்கத்துறையில் முதுகலைமாணிப் பட்டத்தினையும் பெற்றவர். ஆசிரியராக இருக்கின்ற அதேவேளை யாழ் பல்கலைக் கழகத்தின் அரங்கத்துறையின் வருகை விரிவுரையாளராகவும் கடமையாற்றுகிறார். பல நாடகங்களை நெறிப்படுத்தியுமுள்ளார். நடிகன், நெறியாளன், ஹார்மோனிய இசைக் கலைஞன், ஒப்பனையாளன் என பன்முக ஆளுமைகளையும் கொண்ட ஒரு அற்புதமான கலைஞன் இவர்.

## திருமதி வைதேகி செல்மர் எமில்



திருமறைக் கலாமன்றத்தின் 'நாடகத்துறை' பொறுப்பாளராக இருக்கும் இவர், யாழ் பல்கலைக்கழகத்தின் 'நாடகமும் அரங்கியலும்' பாடத்துறையை சிறப்பு பாடமாக கற்றுத் தேர்ந்தவர். பாண்டிச்சேரி பல்கலைக் கழகத்தில் இத்துறையில் முதுகல்விமாணி பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்துள்ளார். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் அரங்கத்துறையின் வருகை விரிவுரையாளராக கடமையாற்றும் இவர், பளை மத்திய மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகவுமுள்ளார். பல நாடகங்களில் நடித்திருப்பதுடன், நாடகங்களை எழுதி நெறிப்படுத்தியுமுள்ளார். அத்துடன் அரங்கவிதானிப்பு, ஒப்பனை போன்ற துறைகளிலும் தனித்துவமான ஆளுமையைக் கொண்டு விளங்குகின்றார்.

# பொன்விழாக் காணும் திருமறைக் கலாமன்றத்திற்கு காலம் சஞ்சிகையின் பொன்னான வாழ்த்துக்கள்!















Canada Thirumarai Kalamanram



Seated (L-R): Mrs.Chithra Felix, Eliyas Arulanantham, Rev.Fr.Peter Gitendran, E.Marianayagam, Christian Emanuel
Standing (L-R): Kumar Jeyapal, Bobby Vethanayagam, Eugene Dominic, Christy Angelo, Jude Aloysius, Jeyaratnam Alfred, Quintus Thuraisingham
(Committee members missing in this picture: Ranjan Arulanantham, Anantham Antony)

# 360° திருமறைக் கலாமன்றம்

We would like to thank our Almighty Father for giving us a successful 25 years to celebrate the organization of Canada Thirumarai Kalamanram. 25 years after the formation of Thirumarai Kalamanram in Srilanka, the Director Rev.Dr.Saveri wanted to explore his long time dream of spreading the wings to the diaspora community. Canada has been the home for the highest number of eelam Tamils outside Srilanka, and the Director, quite rightly chosen Canada to be the first country to have an overseas branch for Thirumarai Kalamanram.

In 1991, the discussions were underway and Lawyer Mr.Manuel Jesudasan became the first president of Canada Thirumarai Kalamanram. We had our first performance of the Passion Play with more than one hundred (100) artists for which the Director was present in Canada in person and overseeing the selection of artists and rehearsals. From that time onwards, we had numerous stage plays that included a variety of cultural programs, Pongal Festivals, Christmas Carols, Summer Gatherings and of course the Passion Plays in large scale.

Canada Thirumarai Kalamanram joined hands with 'Our Lady of Good Health Tamil Parish', the Tamil Catholic Parish in the Greater Toronto, and started performing Passion Plays in smaller scale inside the Tamil Church during the Lent Season, close to the holy week. Thirumarai Kalamanram also stages performances at the United Nations under the banner of 'Peace in the Nation' to showcase the situation of war and victims in Srilanka and why PEACE is imperative & critical.

Canada Thirumarai Kalamanram has also been supporting many vulnerable organizations and/or people who were seriously affected by war in Srilanka by using the entire find we collected by staging the cultural shows in Canada. A Youth Organizati on was also formed which has been functioning very effectively in executing the cultural values and norms of the organization.

After Mr.Manuel Jesudasan's able leadership, Mr.Victor Thiruchelvam became the president and had a very successful career in building the bridges and staging many cultural programs and raising fund for our people back home. In 2008, Mr.Eliyas Arulanandam succeeded as the President of Canada Thirumarai Kalamanram and has been doing an excellent job in fulfilling the dreams and ambitions of our Director Rev.Dr.Nee.Maria Xavier. 2016 is an important year to celebrate a dual festivity. The Thirumarai Kalamanram in Srilanka is celebrating her 50th Year while the Canada Thirumarai Kalamanram branch is celebrating the Silver Jubilee here in Canada.

திருமறைக் கலாமன்றத்தின் இயக்குனரான அருட்கலாநிதி மரியசவிரி அடிகள், யாழ் பல்கலைக் கழகம் உட்பட, இலங்கை இந்திய பல்கலைக் கழகங்கள் பலவற்றிலும், பிலிப்பைன்ஸ் போன்ற உலகளாவிய பல்கலைக் கழகங்களிலும் சைவ சித்தாந்த நெறிக்கான பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார். தொடர்ந்தும் பல பல்கலைக் கழகங்களின் கௌரவ பேராசிரியராகவும் ஆலோசகராகவும் பணியாற்றி வருகிறார்.

மன்ற இயக்குனரின் கலை, கல்வி, தமிழ்மொழி, சைவசித்தாந்தம் போன்றவற்றிற்கான அளப்பரிய பங்களிப்புக்களை நாம் அதிகம் கூறத் தேவையில்லை. கனடா தமிழ் எழுத்தாளர் இணையம், அடிகளாருக்கு கலாமேதை என்று பட்டமளித்து கேடயம் வழங்கியது.

கனடா இந்துமாமன்றத்தின் சார்பில், கலைஞானவாரதி என்னும் பட்டம், இயக்குனருக்கு வழங்கப்பட்டது.
கனடா இந்துமாமன்றத்தின் 1998-99ம் ஆண்டிற்கான அகில உலக சைவ மாநாட்டில் அருட்கலாநிதி மரிய சேவியர் அடிகள் இலங்கையிலிருந்து வந்து கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றியுள்ளார்.

கலைத்தூது, கலாமேதை, கலைஞானவாரதி, கலைஞானி என்ற பல பட்டங்களுடன், பேராசிரியர் டாக்டர் மரியசேவியர் அடிகள் உலகளவில் செயற்படும் இம் மன்றத்தின் கிளைகள் அனைத்தையும் சீராக நிர்வகித்து, வழிகாட்டி வருகிறார்.

அவரது வழிகாட்டலில், திரு.எலியாஸ் அருளானந்தம் அவர்கள், கனடிய கிளையின் தலைவராக சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். 1991ல் ஆரம்பித்த கனடிய திருமறைக் கலாமன்றத்தின் முதலாவது தலைவராக சட்டத்தரணி மனுவல் ஜேசுதாசனும், அவரைத் தொடர்ந்து விக்ரர் திருச்செல்வமும் கடமையாற்றினர். நொவம்பர் 2008ல், தற்போதைய தலைவர் எலியாஸ் அருளானந்தம், தலைமைப் பொறுப்பை ஏற்று, சிறப்பாக மன்றத்தை நடத்திவருகிறார். 2016ம் ஆண்டில் நாம் இந்த கனடிய மன்றத்தின் வெள்ளி விழாவையும், இலங்கை தாய் மன்றத்தின் பொன் விழாவையும் கொண்டாடுவதில் பெருமையடைகிறோம்.

திருமறைக் கலாமன்றத்தின்
சர்வதேச கலைப்பாலம் 2016

# Indo Canada Dance Academy



Smt Padmini Anand





50 years is an accomplishment. It's exciting to know a Organization that has been together this long. Indo Canada Dance Academy - Toronto would like to congratulate Thirumarai Kala Manram for their tremendous hard work. We wish everyone all the very best in the future years, and yearning to spread the good deeds around the world.

*God bless the organization.*

Sincerely,

Padmini Anand

*(Artistic director/ choreographer of Indo Canada Dance Academy)*




AWARD WINNING
JOIN UCMAS ® OPTIBRAIN
A BRAIN-BOOSTING PROGRAM FOR CHILDREN TO BUILDING LIFELONG SKILLS
Our program, designed by child development experts fosters active learning and activates key cognitive functions such as memory, attention, perception symbolic learning and reasoning. UCMAS children become motivated learners the best route to success in academics and beyond!
BENEFITS OF THE UCMAS PROGRAM
DISCOVER THE GENIUS WITHIN
Today's Global Leader in Mental Math and Abacus Education with 2 million children trained worldwide.
Optimal academic success begins at OptiBrain
LEARN • GROW • EDUCATE
Come & Visit Us @
OPTIBRAIN
EDUCATIONAL SERVICES
MARKHAM
905-201-9174
WOODBRIDGE
905-669-2627
ONTARIO CURRICULUM COURSE OFFERINGS
Elementary
(Kindergarten - Grade 8)
ENGLISH, MATH, FRENCH
One on One attention
One step ahead of the school
Qualified Tutors
Small Groups
UCMAS
MENTAL MATH SCHOOLS
DISCOVER THE GENIUS WITHIN®
OptiBrain Educational Services
UCMAS Markham South
160 New Delhi Dr Unit 33,
Markham, ON L3S 0B6
Tel: 905-201-9174 / 416-821-2011
UCMAS Woodbridge
3000 Langstaff Road Unit 5,
Concord, ON L4K 4R7
Tel: 905-669-2627 / 647-866-9784

திருமறைக் கலாமன்றத்தின்
சர்வதேச கலைப்பாலம் 2016

# 1960ல்....... தாயகம் திரும்பிய இளைஞன்!



கனடா திருமறைக் கலாமன்றம் 25 ஆண்டுகள் பூர்த்தியடைவதை எண்ணி பெருமகிழ்ச்சியடைகிறேன். இக் காலப்பகுதியில் எமது தாய் மன்றமான திருமறைக் கலாமன்றமும் 50 வருட நிகழ்வை சர்வதேச மட்டத்தில் நினைவுக் கலைநிகழ்ச்சிகளை நடாத்திவருவது உலகளாவிய கலை மன்றங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி தருகின்ற விடயமே.

இன்றைய காலகட்டத்தில் பரபரப்பாக ஆரம்பிக்கும் அமைப்புக்களெல்லாம் காகித ஓடம் போல ஆன நிலையில், அரை நூற்றாண்டு தாயகத்திலும், கால் நூற்றாண்டு புலம்பெயர் நாடுகளிலும் நிலைத்து நிற்பது ஓர் அரும்பெரும் சாதனையே.

1961ல் கலைமாமணி, கலைஞானவாரிதி, கலைஞானி, முதுமாமணி, புலவர் கலாநிதி போன்ற பட்டங்களைச் சுமந்துகொண்டு உலகம் சுற்றும் வாலிபனாக சுமார் 50 வருடங்களுக்கும் மேலாக தாயகத்தின் மீது கொண்ட பாசத்தினாலும் பற்றினாலும் கிடைத்தவற்றைப் பகிர்ந்து கொள்வதற்காகவும் தாயகம் வந்த அந்த இளைஞனின் எண்ணக் கருவில் உதித்ததுதான் திருமறைக் கலாமன்றம். நேரிய பார்வையும் கூரிய ஆற்றலும், பிரெஞ்சு, ஜேர்மனி, இத்தாலியமொழி, ஆங்கிலம் போன்ற முன்னிலை மேலைத்தேய மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற அருட்கலாநிதி மரியசேவியர் அடிகள்தான் திருமறைக் கலாமன்றத்தை வித்தாக்கினார்.

கத்தோலிக்க குருவாக இருந்தாலும், இந்து இஸ்லாமிய பௌத்த மதங்களைப் பற்றி ஆழ்ந்த அறிவு-கொண்டவராக இருந்தமையால், அவர் எழுதிய பல நூல்களில் சைவ சித்தாந்தமும் சரித்திரத்தில் இடம்பெற்றது. பின்பு கலைமுகம் என்ற காலாண்டு சஞ்சிகை ஒன்றையும் தமிழ் மக்கள் கைகளில் தவழவிட்டார்.

மரியசேவியர் அடிகளார், தனியே கத்தோலிக்க நிகழ்ச்சிகள் என்றில்லாமல் பன்முகக் கலைகளுக்கும் பல்துறை பல்லினக் கலைஞர்களுக்கும் சம அந்தஸ்தும் மதிப்பும் வழங்கி, கலைக்கென யாழில் ஒரு கலைக்கூடத்தையும் நிறுவி, வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள இளைஞர் யுவதிகளை இணைத்து வரலாற்றுச் சாதனையுடன் கலையை உயர்த்தி, மனிதத்தில் உச்சத்தைத் தொட்டார்.

உரும்பிராய் கிராமத்தில் முதன்முதலில் மேடையேற்றப்பட்ட திருப்பாடுகளின் காட்சியில், 100 க்கும் மேற்பட்ட கலைஞர்களைக் கொண்டு காலத்திற்கு ஏற்ற பாணியில் அனல்பறக்கும் அடுக்கு மொழிகளில் வசனங்கள் பொறியாகப் பறக்க, நேரடி இசையும் வாத்தியங்களும் ஒலி ஒளி மேடையலங்காரம், அற்புதமான ஆடை மற்றும் ஒப்பனை என, அனைத்தையும் ஒன்றிணைத்து ஒரு பரிணாம வளர்ச்சியுடன் ஆரம்ப சுழியை அடிகளார் மிகச் கச்சிதமான அத்திவாரத்தை இட்டார்.

திருமறைக் கலாமன்றம் வளர வளர, நாடு முழுவதும் தமிழ், சிங்கள, இஸ்லாமிய கலைஞர்களையும் அரவணைத்து நாடு முழுவதும் நிகழ்ச்சிகளை நடாத்தி, சமாதான கலைப்பாலத்தை உருவாக்கி, கலை மூலம் இறைபணியும் அமைதிப் பணியும் செய்தார். மன்றத்தின் ஆங்கிலப் பெயராக The Center for Performing Arts என்பதையும் அறிமுகம் செய்து உயர்ந்தார். பக்கத்து மாநிலம் தெரியாத கலைஞர்களை வானளாவப் பறந்து சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், பிரித்தானியா, கனடா, நெதர்லாந்து, அவுஸ்திரேலியா, இந்தியா போன்ற பல நாடுகளுக்கும் பறந்து இயல், இசை, நாடகத்தை மேடையேற்றி புகழ்பெற வைத்தார்.

யுத்த மேகங்கள் சூழ்ந்திருந்த காலப்பகுதியில் யாழ் திருமறைக் கலாமன்றக் கலைஞர்களும் கனடா திருமறைக் கலாமன்றக் கலைஞர்களும் இணைந்து, அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையில் நடைபெற்ற வருடாந்த சர்வதேச தலைவர்கள் ஒன்றுகூடும் புரட்டாதி மாத சந்திப்பின்போது, Cradle of War என்ற கலைவடிவத்தைக் காட்சியாக்கி, தாயகத்தில் தமிழர்கள்மீது நடத்தப்படும் கண்மூடித்தனமான தாக்குதலை சர்வதேசத்தில் வெளிக்கொணர்ந்தார்.

கடந்த 25ஆண்டுகளாக ரொறன்ரோவில் இயங்கிவரும் திருமறைக் கலாமன்றம், திருப்பாடுகளின் காட்சி தொடக்கம் பொங்கல், நாட்டுக்கூத்து, கலைப்பட்டடைகள் என்று எண்ணற்ற நிகழ்ச்சிகளை நடாத்தி வருகிறது. கனடா திருமறைக் கலாமன்ற நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள், ஆசிரியர் இராசநாயகம், தற்போதைய தலைவர் எலியாஸ் அருளானந்தம், செயலாளர் குயின்ரஸ் துரைசிங்கம், யூஜின் டொமினிக், கிறிஸ்ரியன் இம்மானுவேல், யூட் அலோசியஸ், அன்ரன் பீலிக்ஸ் உட்பட ஏராளமான ஆற்றல்மிக்க தொண்டர்களை அன்புடன் நினைவுகூர்கிறேன்.

எமது கால்நூற்றாண்டு நிகழ்வுகள் வெற்றிபெற என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

என்றென்றும் அன்புடன்,

**விக்ரர் திருச்செல்வம்**

# திருமறைக் கலாமன்றத்தின் பொன்விழா நிகழ்வு சிறக்க ஜனகன் பிக்சர்ஸ் மனதார வாழ்த்துகிறது!





கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டு தற்போது கனடாவில் வாழ்ந்து வரும் திரு.சின்னத்துரை சிறீமுருகன் அவர்கள், தனது திரைப்படத் துறையின் வளர்ச்சிக்காக உருவாக்கியதே ஜனகன் பிக்சர்ஸ் திரைப்படத் தயாரிப்பு நிறுவனம்.

பாடசாலைப் பருவத்தில் மாணவர் சங்க நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு நாடகப் பாடல்களில் கலந்து பாராட்டுக்களைப் பெற்றுள்ள இவர், நடிப்பு கலையை ஆரம்பத்தில் இணுவையூர் வீரமணி ஐயாவின் நெறியாள்கையில் கற்றுக் கொண்டதுடன், பாடல்களை தனது தந்தையிடமிருந்து கற்றுக் கொண்டார்.

இலங்கையில் மாபெரும் கலைஞர்களான நடிகமணி வி.வி.வைரமுத்து, சிறீவள்ளி புகழ் அண்ணாச்சாமி ஆசிரியர் மற்றும் தனது தந்தையார் ஆகியோரோடு மேடை நாடகங்கள் நடித்துள்ளார். இவரது தந்தையார் தாயகத்தில் ஒரு புகழ்பெற்ற நடிகராக விளங்கினார். அவரது நடிப்பாற்றலுக்காக, அவருக்கு பபூன் சின்னத்துரை என்ற பட்டம் கிடைக்கப்பெற்றது.

சிறீமுருகன் அவர்கள், புலம்பெயர்ந்து கனடா நாட்டுக்கு வந்த காலப்பகுதியில் கலாபம் தொலைக்காட்சியில் கவின்கலாலய அதிபர் கலைஞர் வி.திவ்வியராஜன் அவர்களுடன் சேர்ந்து வில்லிசையில் ஆரம்பித்து, பல மேடை நாடகம், குறிப்பாக கலை பண்பாட்டுக் கழகம், திருமறைக் கலாமன்றம், தென்மராட்சி ஒன்றியம், வானவில் இன்னும் பல கலாமன்றங்களில் நடித்து பாராட்டுக்களைப் பெற்றுள்ளார்.

இதனைத் தொடர்ந்து திரைப்படத் துறைக்கு தமிழ்நாட்டு திரைப்பட இயக்குனர் திரு.கோபிநாத் அவர்கள் மூலம் அறிமுகமானார். இவரை நடிகராக்கிய பெருமை இயக்குனர் ரவி அச்சுதனைச் சாரும். முதன்முதல் கே.எஸ்.பாலச்சந்திரன், ஆனந்தி, சிறீதாஸ் மற்றும் பல கலைஞர்களோடு 'உயிரே உயிரே' என்ற திரைப்படத்தினையும் அதனைத் தொடர்ந்து 'புது உறவு', 'சுகம் சுகமே', 'சிவரஞ்சனி' ஆகிய படங்களைத் தயாரித்தும் நடித்தும் உள்ளார். தற்போது பல பிரபல கலைஞர்களை உள்ளடக்கியதாக, வி.கே.மூர்த்தி அவர்களின் இயக்கத்தில் 'மாங்கல்யம் தந்துனானே' என்ற திரைப்படம் செய்து கொண்டிருக்கிறார்.

இவரது கலை ஆர்வத்தினைப் பாராட்டி கே.எஸ்.பாலச்சந்திரன் குழுவினர், 'கலைஞானி' என்ற கௌரவத்தையும், ரொறன்ரோ அருள்மிகு வரசித்தி விநாயகர் ஆலய பிரதம குருக்கள் சிறீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள், ஆலயத்தின் சார்பில், 'கலைச்சேவா துராந்தகர்' என்ற கௌரவத்தையும், திருச்செந்தூர் ஆலய நிர்வாகம் திரு.திருமதி.மாறன் அவர்கள் 'கலைமாமயில்' என்ற கௌரவத்தினையும், இலங்கை இந்து மாமன்றம் 'கலைமணி' என்ற கௌரவத்தினையும் வழங்கிப் பாராட்டியுள்ளனர். இது மாத்திரமல்லாது திருமறைக் கலாமன்ற ஸ்தாபகர் மதிப்பிற்குரிய நீ.மரியசேவியர் அடிகளார் அவர்களின் பாராட்டுப்பெற்று கௌரவிக்கப்பட்டதையும் பெருமையுடன் நினைவுகூரும் சிறீமுருகன், திருமறைக் கலாமன்றத்தில் மாறுபட்ட வேடங்களில் நடித்தும், ஒப்பனைக் கலைஞனாக பணியாற்றியதனையும் பெரும் பாக்கியமாகக் கருதுகிறார். திரு.இராசநாயகம், ஜீவா மாஸ்ரர், திரு.எலியாஸ் போன்றோரின் நெறியாள்கையில் பல நடிப்புத் திறன்களையும் தான் கற்றுக் கொண்டதாகக் குறிப்பிட்டார்.

**சின்னத்துரை சிறீமுருகன் அவர்களது வாழ்த்து:**

**"திருமறைக் கலாமன்றம் 50 வருடங்களைப் பூர்த்தி செய்து எத்தனையோ கலைஞர்களை அறிமுகம் செய்து கலைக்கும் மக்களுக்கும் ஆற்றிவரும் பெரும்பணியைப் பாராட்டி, இன்னும் இப்பணி சிறப்பாக அமைய எல்லாம்வல்ல இறை அருளை வேண்டி பாராட்டி வாழ்த்துக் கூறுகிறேன்."**

திருமறைக் கலாமன்றத்தின்
சர்வதேச கலைப்பாலம் 2016



*ARTISTIC DIRECTOR:*
**KIRUPANITHY RATNESWARAN**

LAYA BHAVA DANCE ACADEMY

### Laya Bhava Dance Academy

Laya Bhava Dance Academy is a school of Bharathanatyam, Indian Classical Dance. It was established in 1986 by our artistic director, Mrs.Kirupanithy Ratneswaran and follows the kalakshetra style. We have locations in Markham, Scarborough and Toronto. Our school trains students to learn this Indian classical dance and perform as well. Students from the age of 5 to 35 continue to learn dance. Our school provides yearly examinations for all students and offers high school credit courses. We have two textbooks written by our artistic director, Mrs.Kirupanithy Ratneswaran which we use to teach dance and theory. Many students from other schools use these books for exams as well. In addition, we conduct arangetrams for all graduating students. Students continuing their education in dance are taught nattuvangam and the opportunity to learn in special workshops. Many graduates from our school go on further to become dance teachers, performers and even have their own schools.

### Academy's Mission

To impart rigorous training in the technique, expression and performance of Bharata Natyam, an ancient dance nurtured in southern India. Introducing students to its history and evolution, our training highlights Bharata Natyam's role as a communicative device recreating themes from Indian legends. Our students are also exposed to its ability as a language with an alphabet and vocabulary, to represent diverse stories and subjects.

### Smt. Kirupanithy Ratneswaran

With professional training and proper coaching, Kirupanithy had the privilege of teaching dance at her own high school. In 1983, Kirupanithy had move to India to pursue post professional training in dance at the Bharatha Choodamani A cademy of fine arts under the eminent Guru Adyar K. Lakshman.

In 1985, Kirupanithy moved to Germany where she toured as a professional dance artist. In 1996, she began her own school of professional bharatanatyam training in Germany. In 1993, Kirupanithy published her first book, "Bharatha Muthirai" which is a book of dance theory from grade one to seven.

In 1993, Kirupanithy moved to Canada and opened the Canadian branch of her school "Laya Bhava Dance Academy." In 1997, she published her second book "Bharatha Natyam" which is a book consisting of all the adavus with pictures drawn by herself. She has conducted many workshops and has had the privilege of inviting her Guru Adyar K. Lakshman to conduct workshops at her school.

**Contact Info:**
layabhavadance@gmail.com
k_ratnes@hotmail.com
647.802.3498
905.472.3498

Laya Bhava DANCE ACADEMY

திருமறைக் கலாமன்றத்தின்
சர்வதேச கலைப்பாலம் 2016



# கனடிய தமிழ் கலைஞர்கள் சங்கம்

கனேடியத் தமிழ் கலைஞர்கள் சங்கத்தை நானும் ரூபி.யோகதசனும் இணைந்து 2004 ம் ஆண்டு ஆரம்பித்தோம். கடந்த 12 ஆண்டுகளாக இம்மண்ணில் நாடகப் பெருவிழாவை நடத்தி வருகிறோம். கலையின்பால்கொண்ட காதலினால் இந்த "கனேடியத் தமிழ் கலைஞர்கள் சங்கம்" என்ற இந்த அமைப்பின் ஊடாக இங்குள்ள பழைய மாணவர் சங்கங்கள், ஊர்ச்சங்கங்கள் என அனைத்து சங்கங்களின் விழாக்களிலும் நாடகங்கள் நடித்துள்ளோம். அங்கொன்றும் இங்கொன்றுமாக நடித்துவந்த நாங்கள் இருவரும் இணைந்து கனேடியத் தமிழ் கலைஞர்கள் சங்கத்தை ஆரம்பித்தோம். என்னுடைய பதினான்காவது வயதில் "சாம்பிராட்அசோகன்" நாடகத்தில் சாம்பிராட் அசோகனாக நடித்ததின் மூலம் நாடகத் துறைக்குள் பிரவேசித்தவன் நான். ரூபி யோகதாசன் இலங்கையில் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் கல்விப்பிரிவின் துணை இயக்குனராகப் பணியாற்றிய காலத்தில் மலையகம் எங்கும் கருத்தரங்குகளை நடத்தி நிறைவில் நாடகங்கள் நடத்தப்படும். அந்தக்காலங்களில் நாடகங்களில் நடித்ததன் மூலம் சிறந்த அனுபவத்தையும் ஆற்றலையும் வளர்த்தவர் ரூபி.யோகதாசன். கனடாவில் உதயன் பத்திரிகையின் இரண்டாவது ஆண்டுவிழாவில் "சிதம்பரசக்கரம்" என்ற நாடகத்தின் மூலம் நடிகனாக அறிமுகமானேன். ரூபி யோகதாசன் மாவீரர் தினத்தில் இடம்பெற்ற நாடகம் ஒன்றில் ராஜா இப்ராகிம் அவர்களால் அறிமுகம் செய்துவைக்கப்பட்டார்.

கிட்டத்தட்ட இரண்டாயிரத்திற்கு மேற்ப்பட்ட நாடகங்களை நாம் இந்த மண்ணில் மேடையேற்றி உள்ளோம். ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் தொடர்ந்து எட்டு ஆண்டுகளாக "இதுதாண்டா இம்சை" என்ற தொடரை நடத்தி-யுள்ளோம். வானொலியில் பல நாடகங்களை நாம் நடித்துள்ளோம். இருவரும் இணைந்து "கதிரொளி", "கனேடியன்" என்ற இருபடங்களைத் தயாரித்துள்ளோம். இப்படங்களைத் தயாரித்ததன் மூலம் கனடாவின் முதல் பெண் திரைப்படத் தயாரிப்பாளர் என்ற பெருமையையும் ரூபி.யோகதாசன் பெற்றுக்கொண்டார். நாங்கள் இருவரும் எத்தனைதான் நாடகங்கள் திரைப்படங்களில் நடித்திருந்தாலும் எமக்கு பெயரையும் புகழையும் ஆத்மதிருப்தியையும் தந்த நாடகங்கள் கனடா திருமறைக் கலாமன்றத்தின் "திருப்பாடுகளில்" கலந்துகொண்டு நடித்ததுதான். ஆரம்ப காலங்களில் பல ஆண்டுகள் ரூபி.யோகதாசன் தான் "இயேசுவின் தாயாக" நடித்துள்ளார். நான் முதலில் சிறு காவல்காரன் வேடத்தில் தோன்றினேன். பின்னர் "ஏரோது மன்னன்" "யூதாஸ்" "பரிசேயன்" "யாகப்பர்" போன்ற பல முக்கிய பாத்திரங்களிலும் நடித்துப் பலரது பாராட்டுக்களைப் பெற்ற ஆத்ம திருப்தி எங்களுக்குண்டு. பின்னர் எங்கள் இருவருக்கும் ஏற்பட்ட பெரிய சத்திரசிகிச்சைக்குப்பின் இருவரும் சில ஆண்டுகள் நாடகங்களில் நடிக்கவில்லை. 2016ல் நாங்கள் மீண்டும் நடிக்கவந்துள்ளோம். நிச்சயம் இனிவரும் காலங்களில் நாம் திருமறைக் கலாமன்றத்தின் நாடகங்களில் நடிப்போம். அதற்கு இறையருள் எமக்கு துணைபுரியவேண்டும்.

அதேவேளை இலங்கையில் திருமறைக் கலாமன்றம் தனது ஐம்பதாவது "பொன்விழாவை" கொண்டாடுகிறது. இன-மத-மொழிகளைக் கடந்து உண்மையான - தூய்மையான கலைப்பணியாற்றிவரும் திருமறைக் கலாமன்றத்தின் பணி இன்னும் பல்லாண்டு பல்லாண்டு தெய்வத் திருமகன் "இயேசுபிரானின்" திருவருட் கருணையோடும் இந்நிறுவனத்தின் ஸ்தாபகரும் - ஆசானுமாகிய அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாரின் ஆசியோடும் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

கனேடியத் தமிழ் கலைஞர்கள் சங்கம், கதிரொளி வானொலி, உயிர் எழுத்து காலாண்டுச் சஞ்சிகை சார்பில் வாழ்த்துகிறோம்.

கணபதிரவீந்திரன் - ரூபி.யோகதாசன்

CTAA
CANADIAN TAMIL ARTIST'S ASSOCIATION

# GREETINGS FROM NIRTHYA KALANJALI ACADEMY OF FINE ARTS

On behalf of Nirthya Kalanjali and Niro Dance Creations, I would like to extend warm greetings and best wishes for the 50th Annual Sri Lanka Thirumarai Kalamanram!

## NIROTHINI PARARAJASINGAM, BSc.

**Director and Founder of**
**Nirthya Kalanjali & Niro Dance Creations**



Smt. Nirothini Pararajasingam, President and CEO of Nirthyakalanjali Dance Academy and Niro Dance Creations is well known to all through her dedication of promoting Indian Classical Dances and Other contemporary fusion dances among the younger generation for the past 25 years. As an accomplished Indian classical dance performer, choreographer and teacher who strongly believe in promoting values of Indian culture through Bharathanatyam. She received her initial training in Bharathanatyam from well known Gurus, including Smt. Balasundari Kanagasabai and Smt. Gowri Muthukumaraswami.

She later mastered specialized techniques in Bharathanatyam through the guidance of Guru Vijayambikai Indrakumar. Her studies were concluded through the teachings of Guru Adayar K. Lakshmanan. She completed her Bharatha Choodamani diploma for dance and Nattuvangam at the Institute of Bharathachoodamani and obtained her Bachelor of Science degree at Madras University. In 1984 she began her teaching career in science and dance at the Colombo Hindu Ladies College in Sri Lanka for a duration of 5 years. During this period of time she participated in numerous performances along with her students. This included the Harichandra Ballet for which she was awarded the title of "Nirthya Choodamani"; and Beeshma Ballet, which was the first production to be choreographed with over 90 students.

In 1990, she initiated Nirthya Kalanjali Academy of Fine Arts in Toronto, Ontario and to this date she has completed 20 Arangetrams and has participated in raising funds for various organizations, including Canadian Cancer Society, Tsunami Disaster Fund, Hospital for Sick Kids, Scarborough General Hospital, Rouge Valley Hospital, Holland Bloorview Kids Rehabilitation, Heart & Stroke Foundation etc. Her troop has performed in various multicultural events and media productions and several community events as well. In addition, she is a director of the Tamil Cultural Progressive Organization – Canada and is now also a member of the South Asian Philanthropic Council of the Scarborough Hospital.

Overall, she is a creative choreographer who has successfully produced several programs and received numerous awards. Promotes self-discipline, culture and arts for youth within the South Asian Community. She has choreographed Bharathanatyam performances for various community celebrations, fundraising events and mentoring to build skills that can be applied in real life through Bharathanatyam, which in turn inculcates among the students self-discipline for prosperity.

24 Euclid Avenue, Scarborough, Ontario, M1C 1J6, Residence: 416 - 438 - 3494 Cell: 647 - 801 - 2023

Website: www.nirodance.ca Email: niropara@yahoo.ca

ரொறன்ரோ
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி
மேன்மை கொள் சைவநீதியும் தேமதுரத் தமிழும் உலகெலாம் விளங்கும் வகைசெய்வோம்
SRI VARASITHTHI ACADEMY
3039 KENNEDY ROAD, SCARBOROUGH, ON, M1V 1S7

புலம்பெயர் மண்ணில் இன்றைய இளம் சிறார்கள் இந்துசமய பாடநெறிகளையும், சைவத் திருமுறைகளைப் பண்ணோடு பாடவும், ஆலய வழிபாட்டு முறைகள், சமயக் கருத்துக்கள், பண்பாடுகள் என்பனவற்றை அறிந்து சைவமும் தமிழும் இசையோடு தழைத்தோங்கவேண்டும் என்ற பெருநோக்கோடு ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய ஸ்தாபகர் சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமாரகுருக்கள் அவர்களால் ஆழ்ந்த அனுபவம் மிக்க சமய, தமிழ் சான்றோர்களின் ஆலோசனைகளுடன் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரியின் பண்ணிசை வகுப்பு 2005ம் ஆண்டு விஜயதசமி அன்று 65 பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்டது.

இன்றைய இயந்திரமயமான வாழ்க்கைக்கு மத்தியில் எம் இளம் சிறார்கள் நற்பிரஜைகளாகவளர எமது மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு, தியானம், நற்பழக்கம், இறைவழிபாடு என்பவற்றை அறிந்து ஒவ்வொரு பிள்ளையும் அதன்படி ஒழுகவேண்டும் என்ற உயரிய குறிக்கோளுடன் 2006ம் ஆண்டு தைப்பூசதினத்தன்று 120 பிள்ளைகளுடன் புதிய தமிழ், சமய, பண்ணிசைவகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. கல்லூரியின் துரித வளர்ச்சிகண்டு அதிகபிள்ளைகள் சேர்க்கப்பட்டமையால் 2006 செப்டெம்பர்மாதம் முதல், காலை, மாலை இருபிரிவாக அமைக்கப்பட்டு பத்துதரமான ஆசிரியர்களைக் கொண்டுவகுப்புகள் நடாத்தப்பட்டுவந்தது.

மாணவர்கள் படிப்போடுமட்டும் நின்றுவிடாது ஆலயத்தில் நடைபெறும் தைப்பொங்கல், சிவராத்திரி, நவராத்திரி, திருவெம்பாவை, வருடாந்த மகோற்சவம் போன்ற தினங்களில் திருமுறைகளைப் பண்ணோடு பாடுதல், புராணக் கதைகளை நாடகவடிவில் நடித்தல், வாரந்தோறும் வெள்ளிக் கிழமைகளில் நடைபெறும் பஜனை வழிபாட்டில் கலந்துகொள்ள ஊக்குவித்தல் போன்றவை இக்கல்லூரியின் சிறப்பம்சமாகும்.

இக்கல்லூரியில் 2009ம் ஆண்டுமுதல் பிள்ளையார்பட்டி வேதாகம பாடசாலையின் முதற் கிளையாக ஸ்ரீ வரசித்தி விநாயகர் வேதாகம பாடசாலையும், யோகாசன தியான வகுப்புக்களும் இணைக்கப்பட்டது. கல்லூரியின் தனித்துவத்தையும், மாணவர்களின் சமத்துவத்தையும் பேணும் வகையில் சீருடையும் அறிமுகப்படுத்தப்பட்டது. அனைத்து மாணவர்களும் தமிழ்மொழி, சைவநெறி, பண்ணிசையில் மேன்மையுறும் வகையில் எமது இந்துக் கல்லூரியின் ஆசிரியர்களினதும், அறிஞர்களினதும் அனுபவரீதியான ஆலோசனைகளை உள்வாங்கி கல்லூரிக்கென கனடிய பல்கலாச்சா வேற்று மொழி பாடத் திட்டத்திற்கு அமைய இளமழலை முதல் தரம் எட்டுவரையான பாடப் புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. சைவத் தமிழ் பெரியார்களை நினைவுகூரும் முகமாக வகுப்பறைகள் ஒவ்வொன்றும் அவர்களது பெயர்கொண்ட வகுப்பறைகளாக அமைக்கப்பட்டுள்ளது.

வருடா வருடம் மாணவர்களை ஊக்குவிக்குமுகமாக பொதுஅறிவுப் போட்டி நடாத்தி ஆண்டுதோறும் மாணவர்களால் நடாத்தப்படும் சிவத்தமிழ் விழாவில் திறமையுள்ள மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும் வருகின்றது. பத்தாவது ஆண்டு நிறைவுற்று இப்போ பதினோராம் ஆண்டில் 350 வரையான மாணவர்களுடன் 2016 – 2017 கல்வி ஆண்டில் கால் பதித்துள்ளது.

**' மேன்மை கொள் சைவநீதியும் தேமதுரத் தமிழும் உலகெலாம் விளங்கும் வகைசெய்வோம்'**



திருமறைக் கலாமன்றத்தின்
சர்வதேச கலைப்பாலம் 2016








Basement Sound Crew is the first fusion (Remix) band came up with unique ideas and the styles brought to the audience live in stage since 1998, in North America. We performed more than 500 LIVE main stream shows and many local and parties. Still ongoing with powerful energy and ideas.

**Ananthakumar Nadarajah** (Dr.Riddim)
Founder and Creative Planner and the main heart of handling all percussions for "BASS"ment Sound Crew.

**Nimalson Donbosco** (Pootha Kodi Nimal)
"BASS"ment Sound Crew's Main Keyboardist and Main Vocalist

**Nevilson Gilbert** (Nevil)
"BASS"ment Sound Crew's Main Percussion Pad and Son of Nimalson Donbosco

"BASS"ment Sound Crew extends it's heartiest congratulations to Thirumarai Kalamanram for their 50+ years of amazing contribution to the arts and culture.

திருமறைக் கலாமன்றத்தின்
சர்வதேச கலைப்பாலம் 2016



Daily News

